விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 070 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 15 திங்கட்கிழமை (27.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# கொழும்பில் வெடித்தது
# ஜே.வி.பியின் போராட்டம்

- போராட்டத்தை தடுக்க நீர்த்தாரை, கண்ணீர்ப் புகைப் பிரயோகம்.
- 30 பேர் காயமடைந்து வைத்தியசாலையில்.
- இராணுவம், பொலிஸார் குவிப்பு.



(கொழும்பு) தேர்தலை ஒத்திவைக்கும் சதிக்கு எதிராக "கொழும்புக்கு எதிர்ப்பு" என்ற தலைப்பில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தின் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதன்போது காயமடைந்த சுமார் 30 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (11ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் குருதித் தட்டுப்பாடு
### அரச அதிபர்

6ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதி, மூன்று முறிப்புப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில்ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா, ஏ9 வீதி, மூன்று முறிப்புப் பகுதியில் துவிச்சக்கரவண்டி 11

## QR முறையை நீக்குவதுடன் விலையும் சிறிது அதிகரிக்கப்படும்
### அமைச்சர் கஞ்சன



(கொழும்பு)

எதிர்காலத்தில் QR முறை ஒழிக்கப்படும் அதேவேளை, பெற்றோலின் விலையில் சிறிதளவு அதிகரிப்பு செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும், இருப்பினும் தற்போது அவ்வாறான திட்டம் எதுவும் இல்லை எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி 11

## தேர்தல் செலவுகள் தொடர்பில் சரியான திட்டத்தை வழங்குங்கள்
### நிதியமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பணம் கிடைக்காவிட்டால், நாட்டின் அத்தியாவசிய செலவுகளுக்காக கையிருப்பு வைத்திருக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கின் ஊடாக இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்காலிக கொடுப்பனவுகளை செலுத்த முடியாத நிலையில் எதிர்வரும் தேர்தலுக்கான செலவுக 11

## குருந்தூர்மலைக்கு தமிழ் எம்.பிக்கள் திடீர் விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் குருந்தூர்மலைக்கு திடீர் விஜயம் செய்துள்ளனர். 11

## டிசம்பருக்குள் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்
### ஜனாதிபதி ஆலோசகர்

(கொழும்பு)

இழந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க கடினமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் டிசம்பருக்குள் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலை சிறிது சிறிதாக குறைக்கப்பட்டு வருவதாகவும், எதிர்காலத்தில் மின் கட்டணமும் குறைக்கப்படும் என 11

## பிரதமராக மகிந்த ராஜபக்ஷ; செய்தியில் உண்மையில்லை
### பிரதமர் ஊடகப் பிரிவு விளக்கம்

(கொழும்பு)

"பிரதமர் தினேஷ் குணவர்த்தன பதவி விலகப் போவதாக பரவி வரும் வதந்திகளில் உண்மையில்லை, அவ்வாறு செய்வதற்கு எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் கோரிக்கையோ அழுத்தமோ வரவில்லை" என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தினேஷ் குணவர்த்தனவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி முன்னாள் ஜனாதிபதி மகிந்த 11

### கேக் தவிர்ந்த
## பேக்கரி உற்பத்திகளின் விலையை குறைக்க முடியாது
### பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

கேக் தவிர்ந்த, பாண் உள்ளிட்ட ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி தொழில் துறையினருக்கு இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்று 30 ரூபாய்க்கு வழங்கப்படுமாயின் கேக்கின் விலையைக்குறைப் 11

## இலங்கை உள்ளிட்ட கடன் நெருக்கடியில் தவிக்கும் நாடுகளுக்கு நிவாரணம்
### ஜி20 நாடுகள் தீர்மானம்



(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட கடன் நெருக்கடியில் தவிக்கும் நாடுகளுக்கு நிவாரணம் வழங்க ஜி20 நாடுகள் தீர்மானித்துள்ளன.

இலங்கையின் கடன் தொடர்பில், பொதுவான கட்டமைப்பின் கீழ் உரிய நேரத்தில் ஒழுங்கான செயல்முறைகளுக்கு, சர்வதேச நாணய நிதியம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய பெங்களூருவில் நேற்று மூன்று தினம் முடிவடைந்த ஜி20 நிதி அமைச் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருட நடுப்பகுதியில் மீண்டும் மக்கள் எழுச்சி

# புலனாய்வு அறிக்கையால் அரசு கலக்கம்!

(கொழும்பு)

**அரசாங்கம் மக்கள் மீது முறையற்ற சுமைகளை சுமத்துவதன் எதிரொலியாக விரைவில் மீண்டுமொரு மக்கள் போராட்டம் வெடிக்கவுள்ளதாக புலனாய்வுத்துறை அரசுக்கு அறிக்கையிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

இந்த தகவலால் அதிர்ச்சியடைந்துள்ள அரசு, போராட்டங்களை ஒடுக்கும் திட்டங்கள் வகுப்பதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

அரச புலனாய்வுத்துறை இந்த உளவு அறிக்கையை அரச உயர்மட்டத்திற்கு வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான "கோட்டா கோ கோம்" போராட்டத்தை விட தீவிரமான போராட்டமாக அது வெடிக்குமென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இளையவர்கள், மாணவர்கள் முன்னணி வகிக்கும் இந்த போராட்டம் இவ்வருட நடுப்பகுதியில் வெடிக்குமென எச்சரிக்கப்பட் டுள்ளது.

முறையற்ற வரிச்சுமைகளால் மக்கள் தற்போது திண்டாட ஆரம்பித்துள்ளனர். அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளும் சாதாரண மக்களால் வாங்க முடியாத நிலையே காணப்படுகிறது. அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு எதிர்வரும் சித்திரை மாதத்தில் தீவிரமடையலாமென்றும், அதை தொடர்ந்து மக்கள் போராட்டம் ஆரம்பிக்கக் கூடுமென்றும் அந்த எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை அடுத்து, அரசுக்கு எதிரான போராட்டங்களை முடக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பின் முக்கிய பகுதிகளை அதிஉயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி, போராட்டக்காரர்கள் நுழைவதை தடுக்கவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (4-7)


**பணியாளர் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள பூட்சிற்றி ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

**பில் கிளார்க் (இருபாலரும்)**
**பணியாளர்கள் (இருபாலரும்)**
**வயதெல்லை 18 - 40**
அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :-
**077 221 0294**

(14743)


# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

## வடக்கு-கிழக்கு மக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் முதலாம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு சிறிய அளவிலான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ். பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அதேவேளை மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கைக்கு தென்கிழக்கே வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இத் தாழமுக்கம் தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் இற்றைப்படுத்தப்படும் என அவர் தனது முகப்புத்தகத்தின் ஊடாக பதிவிட்டுள்ளார். (4-7)


**உயர்வு பெற வேண்டி வாஞ்சையுடன்**

**வாழ்த்துகிறோம்**

**2023 இல் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை**



**செல்வன் மு.அனுராம்**

**150 புள்ளிகள்**

யா/ உடுவில் மகளிர் கல்லூரி மாணவனும் புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய் வாழ் திரு.திருமதி **முகுந்தன் இராஜலக்சுமி** தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனுமான செல்வன் **அனுராம் 150 புள்ளிகள்** பெற்றுச் சிறப்பாகச் சித்தியடைந்தமையை பாராட்டி மேலும் கல்வியில் உயர்வு பெற வேண்டி இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறோம்.



**செல்வி பா.மஞ்சரி**

**151 புள்ளிகள்**

யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவியும் கோப்பாய் மத்தி, கோப்பாய் வாழ் திரு.திருமதி **பாலமுரளி சஜினி** தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியுமான செல்வி **மஞ்சரி 151 புள்ளிகள்** பெற்றுச் சிறப்பு சித்தியடைந்தமையை பாராட்டி மேலும் கல்வியழகு பெற வேண்டி இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர்**

அன்பு அப்பப்பா மு.தர்மலிங்கம்
(B.A (Cey) JP - Sworn Translater)
அன்பு அப்பம்மா த.கோமதி
ஆசை ஆதிரா

Congratulations!

(C6068)



**பல ஆயிரம் கடந்த பதிவுகள்**

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்

**கல்யாணி மாலை**

**சர்வதேச இலவச திருமண சேவை**

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

**இணையத்தளத்தைப் பாருங்கள்**

அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக

பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500 /-



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டிச்சேரி படகு சேவை; அரசாங்கம் தீவிர கவனம்

(கொழும்பு)

நீண்ட காலமாக எதிர் பார்க்கப்படும் வடக்கு மற்றும் பாண்டிச்சேரிக்கான படகு சேவையைத் தொடங்க, காங்கேசன் துறை துறைமுகத்தின் உட் கட்டமைப்பு அபிவிருத்தியை விரைந்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் சுங்கம் மற்றும் குடிவரவுத் துறையினருக்கான வசதிகளும் மார்ச் மாத இறுதிக்குள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து தென்னிந்தியாவின் பல இடங்களுக்குச் செல்லும் விமான சேவைகள் அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. (4)

# இனத்துவ அடிப்படையில் எல்லை நிர்ணயம் இல்லை

## எல்லை நிர்ணய ஆணைக்குழு

(கொழும்பு)

**இனத்துவ அடிப்படையில் இம்முறை எல்லைகள் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

எதிர்காலத் தேர்தல்களுக்குப் பொருத்தமான முறையில் எல்லைகளை மறுசீரமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் எல்லை நிர்ணய ஆணைக் குழுவொன்றை அமைத்திருந்தார்.

தற்போதைக்கு உள்ளூராட்சி மன்றங்களில் இருக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்தில் இருந்து 4 ஆயிரத்து 800 ஆக குறைப்பது, போட்டியிட்டு தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5092 இலிருந்து 2800 வரை குறைப்பது



போன்ற இலக்குகள் இந்த எல்லை நிர்ணய மறுசீரமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேநேரம் முன்னைய எல்லைநிர்ணய நடவடிக்கையின் போது இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் இம்முறை முற்றாக கைவிடப்பட்டுள்ளதாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்புகளில் இருந்தும் அது குறித்த அழுத்தங்கள் வந்த போதும், தாம் அதனைப் புறம் தள்ளி எல்லைகளை மறுசீரமைப்பது தொடர்பில் அறிக்கை தயாரித்துள்ளதாகவும் எதிர்வரும் வாரத்தில் அதனை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# அநுர உள்ளிட்ட 25 பேருக்கு 8 மணி நேர தடை உத்தரவு



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 25 பேருக்கு 8 மணி நேர தடை உத்தரவு நேற்று கோட்டை நீதவான் பிறப்பித்தார்.

அதற்கமைய, நேற்று பிற்பகல் 1 மணி முதல் இரவு 8 மணி வரை ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு மற்றும் காலி முகத்திடலை சுற்றியுள்ள பகுதிகளுக்குச் செல்ல முடியாது என நீதிமன்ற தடை விதிக்கப்பட்டது.

நேற்று தேசிய மக்கள் சக்தி எதிர்ப்பு பேரணியொன்றை நடத்துவதற்கு திட்டமிட்ட நிலையில், நாட்டின் நிலைமைக்கு இடையூறு ஏற்படும் வகையிலான எதிர்ப்பு நடவடிக்கையாக மாறலாம் என பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். (4)

# ரூ.30 இற்கு முட்டைகளை விற்க முடிவு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 30 ரூபாய் விலையில் உணவு உற்பத்தியாளர்களுக்கு வழங்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

முட்டையின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் முட்டைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அண்மையில் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம், 2 மில்லியன் முட்டைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் சந்தைக்கு விநியோகிக்கப்பட மாட்டாது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விரைவான கடன் மறுசீரமைப்பு தேவை

## உலக வங்கி




(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட ஏனைய நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கு விரைவான கடன் மறுசீரமைப்பு தேவை என உலக வங்கியின் தலைவர் டேவிட் மெல்பாஸ் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் இடம்பெற்ற ஜி20 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைத்த அவர், இலங்கையின் கடனை விரைவாக மறுசீரமைக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

சாம்பியா புரிந்துணர்வு ஒப்பந்தம், கானா உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு, எத்தியோப்பியா மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் நிதி உறுதிப்பாடுகள் போன்ற தீர்வுகளை அடைய அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு உடன்பாடு ஏற்பட்டால் அடுத்த சில மாதங்களில் குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்றும் அதற்கான செயன்முறையை கண்டறிய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# தனியார் மருத்துவமனையில் இலவச சிகிச்சைப்பிரிவு

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

இந்திய கடன் திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மருந்துகளை மேலதிகமாக பெற்றுக் கொள்ள முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை பிரிவுகளை உருவாக்குவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் உள்ள இலங்கை முப்படை மருத்துவக் கல்லூரியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (4)

# ஜூன்வரை உதவி வழங்க 4.5 மில்.டொலர் தேவை

## உலக உணவுத் திட்டம்

(கொழும்பு)

உலக உணவுத்திட்டம் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள 636,125 பேருக்கு அவசியமான உதவிகளை வழங்கியிருப்பதுடன், எதிர்வரும் ஜூன் மாதம் வரையான 6 மாத காலத்திற்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு 4.5 மில்லியன் டொலர் நிதி அவசியமென மதிப்பிட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதாரம் இன்னமும் மீட்சியடையாத நிலையில், அதன் விளைவாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவருகின்றது.

அதேவேளை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களான உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, யுனிசெப் அமைப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு சர்வதேசப் பொதுக்கட்டமைப்புக்கள் அத்தியாவசிய உதவிகளை வழங்கி வருகின்றன.

அந்த வகையில் இலங்கையில் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருப்போருக்குக் கடந்த ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள உதவிகள் மற்றும் தேவையான நிதியுதவி என்பன குறித்து உலக உணவுத்திட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# வீதிகளில் வன்முறையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை

## பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

போக்குவரத்தின் போது வீதியில் வன்முறையாக நடந்து கொள்ளும் நபர்களைக் கண்டுபிடித்து கைது செய்ய விசேட நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்காக பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவின் ஆலோசனையின் பேரில் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெலிப்பன்னையில் மாணவர்களால் ஆசிரியர் ஒருவர் தலைக்கவசத்தால் அடித்துக் கொன்ற சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


கெஸ்பேவ, பொரலஸ்கமுவ மற்றும் பிலியந்தலை பிரதேசங்களில் இவ்வாறானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### இந்தியாவில் நடைபெறவுள்ள

# ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் வெல்ல வேண்டும்

## என் விருப்பம் இதுவே என்கிறார் பாபர் அசாம்



1992 இல் பாகிஸ்தான் அணி இந்தியாவில் வைத்து உலகக் கிண்ணத்தை வென்றது போன்று, இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் வெல்ல வேண்டும் என பாபர் அசாம் விருப்பம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நடத்த திட்டமிட்டுள்ள ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா பங்கேற்கவில்லை என்றால் பாகிஸ்தான் இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் பங்கேற்காது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ரமீஸ் ராசா கூறியிருந்த நிலையில், பாபர் அசாமின் இந்த கருத்தை பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

இவ்விடயம் குறித்து பாபர் அசாம் கூறுகையில்,

"நான் நிறைய சாதிக்க வேண்டும் என விரும்புகிறேன். ஆனால், இப்போதைக்கு எனது பிரதான இலக்கு, அது நடப்பு பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் சதம் விளாசுவதுடன், பெஷாவர் அணிக்கு சம்பியன் பட்டம் வென்று கொடுப்பதும்தான்.

அதேபோல இவ்வாண்டு இந்தியாவில் நடை பெறவுள்ள ஐ.சி.சி உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். எங்கள் அணி வெற்றி பெறுகின்ற அணியாக இருக்க வேண்டும்.

நான் சில புதிய துடுப்பாட்ட முறைகளை முயற்சித்து வருகிறேன். எனக்கு அதில் நம்பிக்கை கிடைக்கும் பட்சத்தில் போட்டிகளில் அதைச் செய்வேன். அதேநேரத்தில் எனது வழமையான துடுப்பாட்ட பாணியையும் தொடருவேன்" என்றார்.

இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணி, உலகக் கிண்ணத்தை 1992 இல் இந்தியாவில் நடைபெற்ற போதே கைப்பற்றிருந்த நிலையில், பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி, இம்முறை இந்தியாவில் நடை பெறும் உலகக் கிண்ணத்தை வெல்லுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். (நி)

### ஸ்பெயின் அணியின்

# கால்பந்து ஜாம்பவான் திடீர் ஓய்வு

ஸ்பெயின் அணியின் ஜாம்பவான் வீரர் செர்ஜியோ ராமோஸ் சர்வதேச கால்பந்தில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஸ்பெயின் அணியின் 36 வயது ஜாம்பவான் வீரர் செர்ஜியோ ராமோஸ். தனது அணிக்காக 180 போட்டிகளில் விளையாடியுள்ள ராமோஸ் 23 கோல்கள் அடித்துள்ளார்.

அத்துடன் ஸ்பெயினுக்கு உலகக் கிண்ணம் மற்றும் இரண்டு ஐரோப்பிய கிண்ணங்களை வென்று கொடுத்துள்ளார். ரியல் மாட்ரிட் அணிக்கு 469 போட்டிகளில் 72 கோல்கள் அடித்த ராமோஸ், 2021 ஆம் ஆண்டு பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியில் இணைந்தார்.

இந்த நிலையில் சர்வதேச கால்பந்தில் இருந்து ஓய்வு பெறுவதாக செர்ஜியோ ராமோஸ் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "எனது நாட்டை 180 முறை பெருமையுடன் பிரதிநிதித்துவப் படுத்திய சிறப்புரிமை பெற்ற நபராக, உணர்ச்சியுடன் நான் வீட்டில் இருந்து தொடர்ந்து உற்சாகப்படுத்துவேன். என்னை எப்போதும் நம்பியிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றி" என தெரிவித்துள்ளார். (நி)




தருமபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்ட நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. தருமபுரம் மத்திய கல்லூரி முன்றலில் ஆரம்பிக்கப்பட்டு தேராவில் சந்தி வரை சென்றடைந்து அங்கிருந்து மீண்டும் தருமபுரம் மத்திய கல்லூரியை வந்தடைந்தது. (படம் - தேவானந்தன்)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2772

**லதாங்கி**





**பார்த்தீபன்**




**மதிஷா**




**அகிலன்**




**திவ்யா**




**அபிசன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களை அனுமதிக்கக் கூடாது

## மீண்டும் வலியுறுத்திய வடபகுதி மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

**இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி வழங்கும் முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடபகுதி கடற்றொழிலாளர்களால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**



இம்முறையை நடைமுறைப்படுத்தக் கூடாது என வலியுறுத்தியும் இதற்கு நடவடிக்கை எடுக்க கோரியும் நேரில் சந்தி த்து பேச வாய்ப்புதரக்கோரியும் குறித்த கடிதத்தில் வலியுறுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் வடபகுதி கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் இடையே இடம் பெற்ற கலந்துரையாடலில் குறித்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காது விட்டால் வடபகுதி கடற்றொழி லாளர்கள் அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்றில் பேசிய வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்ப ரப்பில் அனுமதி வழங்கும் முறைமையை பரிசீலிப்பதாக தெரிவித்தமை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஊடக சந்திப்பில் வடபகுதி கடற்றொழிலாளர் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது. (4)

# உயிருக்கு போராடிய சிறுவனுக்கு சிகிச்சையளிக்க மறுத்த மருத்துவர்

(கொழும்பு)

தென்னிலங்கையில் உள்ள அரச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுவனுக்கு சிகிச்சையளிக்க மருத்துவர் மறுத்த காணொளியொன்று தற்போது சமூக வலைத் தளங்களில் பரவி வருகின்றது.

இதன்போது குறித்த மருத்துவர் சிறுவனையும் தந்தையையும் கடுமையான வார்த்தைகளால் திட்டியுள்ளதுடன், தாக்கி வெளியில் தள்ளியுள்ளார்.

இந்த மருத்துவரின் இரக்கமற்ற செயலுக்கு கடும் கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை, பலரும் குறித்த மருத்துவரின் செயலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், சுகாதார அமைச்சு இந்த மருத்துவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக வலைத் தளங்கள் ஊடாக பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4)

# அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது அதிசயமே

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

நாம் எதிர்கொண்ட நெருக்கடிகளை ஆராயும் போது அரச ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்க முடிந்தமை ஒரு அதிசயமாகவே தெரிகிற்து என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பட்ஜெட்டில் செலவினங்கள் நிறை வேற்றப்பட்டிருந்தால், அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

எங்களின் செலவினங்களுக்கு சரியான முன்னுரிமை அளித்ததால், நீண்ட எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம்.

12 மணி நேர மின்வெட்டை ஓரிரு மணி நேரமாகக் குறைத்துள்ளோம். மருந்துத் தட்டுப்பாடு இருந்தாலும், அன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் இது குறைவு.

அன்றைக்கு விவசாய உரத்துக்காக கூக்குரலிட்ட விவசாயிகள் தற்போது நெல்லை விற்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். எனவே, ஒருவித மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நாம் எதிர்கொண்ட நெருக்கடிகளை ஆராயும்போது அரச ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்க முடிந்தமை ஒரு அதிசயமாகவே தெரிகிறது எனத் தெரிவித்தார். (4)

# நெடுஞ்சாலைகள், ஏனைய வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

நிதிபற்றாக்குறையால் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி கிடைக்கும் வரை அதிவேக நெடுஞ்சாலைகள், ஏனைய வீதிகளின் அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன் தெரிவித்துள்ளார்.

மூன்று நெடுஞ்சாலைகளின் நிர்மாணப் பணிகளான ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை, மத்திய அதிவேக் நெடுஞ்சாலையின் தம்புள்ளை பிரிவு மற்றும் கண்டி பிரிவுகளின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பல வீதிகள் நிதிப் பிரச்சினை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் கார்ப்பெட் போடும் பணியும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் வீரகோன் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம வரையான பகுதியின் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம் பெற்று வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பணம் கிடைத்தவுடன் பணிகள் செயற்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# இராசிபலன்

27.02.2023
மாசி 15, திங்கட்கிழமை
அட்டமி முழுவதும்

கார்த்திகை முற்பகல் 9.54 மணிவரை
சுபநேரம் 12.29-1.59 மணிவரை
இராகுகால்ம் 7.59-9.29 மணிவரை

சந்திராஷ்டமம் - சுவாதி

**வளவன்**

**மேஷம்** – துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – வியாபாரத்தில் சிறு மாற்றம் செய்ய முற்படுவீர்கள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** – அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலை பேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** – வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம்.

**கன்னி** – தொழிலில் இருந்த எதிர்ப்புகள் மாறும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.

**துலாம்** – கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, விட்டுக் கொடுத்து செல்வதால் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்** – சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள்.

**தனுசு** – வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலன் சீராகும், கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**மகரம்** – உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறைவாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்** – பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

தன்னைப் பணிவாரை தான் பணியும் காலமும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழில் குருதித் தட்டுப்பாடு

# அரச ஊழியர்கள் குருதிக்கொடை வழங்க முன்வர வேண்டும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் குருதித் தட்டுப்பாடு உள்ளது. இதனால் நாம் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் குருதிக்கொடை செய்வதற்கு முன்வரவேண்டும் என யாழ்.மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தால், அரச உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறண் தடைகாண் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

அரச உத்தியோகத்தர்கள் அலுவலக நேரங்களில் மக்கள் சேவையில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். உத்தியோகத்தர்கள் அலுவலகங்களில் வீண் பொழுது போக்குகின்றார்கள் என்ற எண்ணம் மக்கள் மனங்களில் ஏற்படக் கூடாது. அலுவலகத்திற்கு வருகின்ற வயோதிபர்கள் விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

அரச பணிக்கு வருகின்ற அனைவரும் ஏதோ ஒரு துறையில் படித்தவர்கள். அவர்கள் பண்பாக செயற்பட வேண்டும். பொதுமக்கள் மனங்களில் இடம்பிடிக்கத்தக்க செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

அலுவலக உத்தியோகத்தர்களோ ஆசிரியர்களோ வேறெந்த துறைசார்ந்தவர்களோ



தமது பணியுடன் மட்டும் நின்றுவிடாமல் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும் என அவர் தெரிவித்தார். (4-33)

## ஹெரோயின் போதைப்பொருளுடன் வரணியில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவளை இயற்றாலை -வரணிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு விசேட அதிரடிப் படையினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப் பொருள் சோதனை நடவடிக்கைக்கு சென்ற போது வீட்டில் இருந்தவர்கள் படையினரின் கடமைக்கு இடையூறு விளைவித்திருந்த நிலையில் இருவரைக் கைது செய்ததுடன் 250 மில்லிகிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைதான மூவரும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

## எழுதுமட்டுவாழில் சிறுதானிய செய்கையாளர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட ஒட்டுவெளி வயல்வெளியில் காலபோக நெற்செய்கைக்குப் பின்னரான சிறுதானிய செய்கையில் ஈடுபடவுள்ளவர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை கருத்து தெரிவிக்கையில்

குறித்த வயல்வெளியில் சிறுதானிய செய்கையில் ஈடுபட இதுவரை 40 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் சிறுதானிய செய்கை மேற்கொள்ளவுள்ள சகலரும் கலந்து கொள்வதுடன் கால்நடை வளர்ப்பவர்களும் பங்குபற்ற வேண்டும்.

அத்துடன் கூட்டத்திற்கு வருகை தரும் விவசாயிகள் 2023 ஆம் ஆண்டிற்கான சந்தா பணத்தினையும் செலுத்த முடியும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (4-30)

## யாழ்ப்பாண தமிழ் இளைஞருக்கு பிரான்ஸில் உயரிய பதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இலங்கை தமிழ் இளைஞர் பிரான்ஸ் பொலிஸ் பிரிவில் முக்கிய பதவியில் இணைந்துள்ளார்.

பிரான்ஸில் தேசிய பொலிஸ் அதிகாரி டிப்ளோமா பட்டம் பெற்ற 175 பேருக்கான சான்றிதழ்களை உள்துறை அமைச்சர் வழங்கியுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த இலங்கை தமிழ் இளைஞர் பொலிஸ் அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரான்ஸில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் இவர் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-104)

## அரச நிறுவனங்களின் அனைத்து கட்டணங்களும் டிஜிட்டல் மயமாக்கப்படும்

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் அரச நிறுவனங்களின் அனைத்து கட்டணங்களும் டிஜிட்டல் முறை மூலம் பெற்றுக் கொள்ளப்படும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் இவ்வருடம் செப்டெம்பர் மாதம் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் டிஜிட்டல் மயமாக்கலுக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இணையப் பாதுகாப்புச் சட்டம் இந்த ஆண்டுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார். (4)

# பணம் சேகரிக்கும் திருட்டுக் கும்பல் தொடர்பில் பொதுமக்கள் அவதானம்

## வலி.வடக்கு பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க அலுவலர்கள் என தம்மை அடையாளப்படுத்தி பொதுமக்கள் மத்தியில் பணம் சேகரிக்கும் திருட்டுக் கும்பல்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என வலி. வடக்கு பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சமுர்த்தி உத்தியோகத்தர் என தம்மை அடையாளப்படுத்தி பொதுமக்களிடம் இருந்து சட்ட விரோதமாக பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுள்ளதாக பல செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதால். இத்தகைய மோசடிக்காரர்களிடம் இருந்து பொதுமக்கள் தங்களது பணத்தினைப் பாதுகாப்பதற்கு தேவையான விழிப்புடன் இருக்க வேண்டும் என்பது மிக அவசியமான ஒன்றாகும்.

தற்போதைய நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார [illegible] காரணமாக பல்வேறு வாழ்க்கை சுமைகளை அனுபவித்து வரும் பொதுமக்களிடம் அரச உதவிகளைப் பெற்றுத் தருவதாகவும் அதற்காக தாம் நிதி சேகரிப்பதாகவும் பல பொய்யான தகவல்களை மிகவும் சாதுரியமான முறையில் தெரிவித்து அவற்றை நம்ப வைத்து பொதுமக்களிடம் இருந்து பணத்தினைப் பெறுக் கொள்ளும் சம்பவங்கள் நடை பெறுவதாக தகவல்கள் வருவதனால், எமது பிரதேசத்தில் உள்ள எந்தவொரு பொது மக்களும் இது போன்ற மோசடி நபர்களின் திருட்டுச் செயல் பற்றி மிக அவதானமாக செயலாற்றுமாறு தங்களை நாம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அரசாங்கத்தின் உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மறைமுகமாக பணத்தினைப் பெற்றுக் கொள்ளும் எந்தவொரு ஏற்பாடும் இல்லாத காரணத்தினால் பொது மக்கள் இது குறித்து குழப்பமடையத் தேவையில்லை.

எந்தவொரு நபரும் தங்களிடம் பணம் பெற்றுக் கொள்ளுவதற்கு இது போன்ற ஆசை வார்த்தைகளை கூறினால் அது முற்று முழுதாக சட்ட விரோதமான செயல் என்பதுடன் அரசாங்க நிர்வாக நடைமுறைக்கு முற்றிலும் புறம்பான செயல் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு தங்களை நாம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந் நபர்கள் பற்றி தங்களிடம் ஏதாவது தகவல்கள் இருப்பின் உடனடியாக உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர் அல்லது ஏனைய கிராம மட்ட உத்தியோகத்தர்களிடம் தெரியப்படுத்துமாறு தங்களை நாம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் விடயம் குறித்து மேலதிக தகவல்கள் தேவைப்படின் 021 224 1726 என்ற எமது இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நோய்களை கட்டுப்படுத்த புதிய விதிமுறைகள் அவசியம்

## உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

**தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்த உலகளாவிய புதிய வழிகாட்டுதல்கள் உருவாக்கப்படுவதற்கு முன்னர் தற்போதைய விதிமுறைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் நடைபெற்ற உலக சுகாதார செயற்குழு அமர்வில் சர்வதேச விதிமுறைகள் குறித்த உடன்பாடு எட்டப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று நோயால் ஏற்பட்ட சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில் சுகாதார விதிமுறைகளில் 307 திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுகாதாரத்தை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம், குறிப்பாக குறைந்த வருமானம் உள்ள நாடுகளில், மேலும் தகவல் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டுள்ளது. (4)

# கலிபோர்னியாவில் கடும் பனிப்பொழிவு



(கலிபோர்னியா)

அமெரிக்காவில் கலிபோர்னியாவின் மேற்கு மாகாண பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்புயல் நிலவி வருகிறது.

தொடர்ந்து மழையும் பெய்து வருவதால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

பொதுமக்கள் வெளியே வர முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கி இருக்கிறார்கள். முக்கிய வீதியில் பனிகட்டிகள் பல அடி உயரத்தில் உறைந்து கிடப்பதால் முக்கிய சாலைகள் அனைத்தும் மூடப்பட்டு உள்ளது. 300 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

பல இடங்களில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டு உள்ளதால் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகிறார்கள். (4)

# பப்புவா நியூகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்




(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் அண்டை நாடான பப்புவா நியூகினியா அருகே நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவாகியிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

சில விநாடிகள் நீடித்த நிலநடுக்கத்தின் போது வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின.

இதனால் பீதியடைந்த மக்கள் சாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (நி)

# அமெரிக்காவை அச்சுறுத்தும் ஜாம்பி போதைப்பொருள்





(வோஷிங்டன்)

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்திற்கு அடுத்து போதைப்பொருள் பயன்பாடு அரசுக்கு பெரிய தலைவலியாக மாறியுள்ளது.

அந்த வகையில் இப்போது ஜாம்பி போதைப்பொருள் பிரபலமாகி வேகமாகப் பரவி வருகிறது. ஹெரோயினுக்கு பதிலாகவே முதலில் இதைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதன் பின்னரே இதன் பயன்பாடு அதிகரித்துள்ளது.

டிராங்க் டோப் எனப்படும் இந்த ஜாம்பி போதைப் பொருளை பயன்படுத்தினால் மிக மோசமான பக்கவிளைவுகள் ஏற்படுகிறது.

இதை எடுத்துக் கொண்டால் மயக்க மருந்தை எடுத்துக் கொண்டது போல இருக்குமாம். தீவிர தூக்கம், மன அழுத்தம், மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் கை, கால்களில் மோசமான புண்கள் ஏற்படுமாம்.

அதனை அப்படி கவனிக்காமல் விட்டால் தோல் முழுவதும் பாதிப்படைந்து அழுகி விடுமாம்.

இந்த போதைப்பொருளை பயன்படுத்தியதும் உச்சக்கட்ட போதை அடைவதால், அதனை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. போதை தலைக்கேறினால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்றெல்லாம் நினைவில் இருக்காதாம்.

ஜாம்பிக்கள் போல சாலைகளில் ஒரு சிலர் சுற்றித் திரியும் வீடியோ வெளியான நிலையில், அவர்கள் இந்த போதைப்பொருளை பயன்படுத்தியவர்கள் என தெரிய வந்துள்ளது. (4)

# உக்ரைனுக்கு அமெரிக்கா மேலும் 2 பில்லியன் டொலர் ஆயுத உதவி



(வோஷிங்டன்)

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து ஓராண்டு நிறைவடைந்துவிட்டது.

இந்தப் போரில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன.

உக்ரைனுக்குத் தேவையான ஆயுத உதவியை வழங்கிவரும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ரஷ்யா-உக்ரைன் அமைதி பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும் என்று இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஆயுத உதவியால் இந்தப் போர் பல மாதங்களாக நீடித்து வருகிறது. இந்நிலையில், உக்ரைனுக்கு 2 பில்லியன் டொலர்கள் ஆயுத உதவி வழங்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 113





மற்ற எல்லாக் கொடிகளையும் தாழ்த்திக் கொண்டு மேக மண்டலத்தை அளாவிக் கம்பீரமாக ஒரு பெரிய புலிக்கொடி பறந்தது. அதுவே சக்கரவர்த்தி தங்கும் அரண்மனையாக இருக்க வேண்டும் என்று வல்லவரையன் ஊகித்துக் கொண்டு, அக்கொடி பறந்த திக்கை நோக்கித் தான் மேலே செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு நடந்தான்.

சக்கரவர்த்தியை நேரில் சந்தித்து ஓலையைக் கொடுப்பது முதற் காரியம். அதோடு ஆதித்த கரிகாலர் நேரில் வாய்மொழியாகத் தெரிவிக்கச் சொன்னதையும் சொல்ல வேண்டும். சின்னப் பழுவேட்டரையரின் அனுமதியின்றிச் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது. அவருடைய அனுமதியை எப்படிப் பெறுவது? கோட்டைக்குள் பிரவேசிப்பதற்குத் தெய்வம் துணை செய்தது.

ஆனால் முழுதும் தெய்வம் வழி காட்டும் என்றே இருந்து விடலாமா? சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு நாமேதான் யுக்தி கண்டுபிடித்தாக வேண்டும்! அது என்ன யுக்தி! வாணர் குலத்தில் வழிவழியாக வந்த மூளையே! கொஞ்சம் வேலை செய், பார்க்கலாம்! சிறிது உன் கற்பனா சக்தியைத் தட்டி விடு! காவியம், கவிதை எழுதுவோருக்கு மட்டும் கற்பனா சக்தி தேவை என்பதில்லை. உன்னைப் போல் இராஜாங்க காரியங்களில் ஈடுபட்டவர்களுக்கும் கற்பனா சக்தி வேண்டும் எங்கே, உன் கைவரிசையைக் காட்டு, பார்க்கலாம்!

பெரிய பழுவேட்டரையர் இன்னும் கோட்டைக்கு வந்து சேரவில்லை என்பதை வந்தியத்தேவன் உறுதிப்படுத்திக் கொண்டான்.

கோட்டை வாசலைத் தாண்டி உள்ளே வந்ததும் அங்கே உட்புறத்தில் நின்ற காவலன் ஒருவனிடம், "ஏன் அப்பா! பழுவேட்டரையர் திரும்பி வந்து விட்டாரா?" என்று கேட்டான்.

"யாரைக் கேட்கிறாய், தம்பி! சின்னவர் அரண்மனையில்தான் இருக்கிறார்."

"அது எனக்குத் தெரியாதா? நடுநாட்டுக்குச் சென்றிருந்த பெரியவரைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"ஓ! பெரியவர் நடுநாட்டுக்கா சென்றிருந்தார்? அது எனக்குத் தெரியாது. நேற்று மாலை இளைய ராணியின் பல்லக்குத் திரும்பி வந்தது. பெரிய அரசர் இன்னும் வரவில்லை இன்று இரவு திரும்பக்கூடும் என்று செய்தி வந்திருக்கிறது!" என்றான் காவலன்.

இது நல்ல செய்திதான் பெரிய பழுவேட்டரையர் திரும்பி வருவதற்குள்ளே எப்படியும் சக்கரவர்த்தியைப் பார்த்து ஓலையைக் கொடுத்தாக வேண்டும். அதற்கு என்ன வழி? வந்தியத்தேவனுடைய மூளையில் ஒரு யோசனை உதயமாகி விட்டது. அந்தக் கணமே அவன் முகத்தில் கவலைக்குறி மறைந்தது; குறும்புப் புன்னகையும் குதூகல மலர்ச்சியும் தோன்றின.

சக்கரவர்த்தியின் அரண்மனையை அணுகுவதற்கு அவன் அதிகமாக அலைந்து திரிய வேண்டியிருக்கவில்லை. பெரிய புலிக் கொடியைப் பார்த்துக் கொண்டே போனான். விரைவிலேயே அரண்மனை முகப்பை அடைந்து விட்டான்.

ஆகா! இது எத்தகைய அரண்மனை! தேவலோகத்தில் தேவேந்திரனுடைய அரண்மனையையும் உஜ்ஜயினி நகரத்து விக்ரமாதித்யனுடைய அரண்மனையையும் போல அல்லவா இருக்கிறது? அந்த முன்வாசல் மண்டபத்துத் தூண்களில் செய்திருக்கும் சிற்ப வேலைகளின் அற்புதந்தான் என்ன! ஒவ்வொரு தூணிலும் செதுக்கியிருக்கும் குதிரை, முன்கால்களைத் தூக்கிக் கொண்டு அப்படியே பாய்வது போல இருக்கிறதே!

அரண்மனையை அடைவதற்குப் பல பாதைகள் நாலா திசைகளிலிருந்தும் வந்தன. ஒவ்வொரு பாதை முடிவிலும் இரண்டு குதிரை வீரர்களும் சில காலாள் வீரர்களும் நின்றார்கள். அவர்களண்டை நெருங்கி வராமலே அவ்வீதிகளில் நடமாடிய ஜனங்களில் பலர் திரும்பிப் போய் விட்டார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்


## திறமையான குள்ளன்

(நேற்றைய தொடர்ச்சி)

தன் கையிலிருந்த அடையைச் சிறுசிறு துண்டுகள் ஆக்கினான். வழி எங்கும் அதைப் போட்டுக் கொண்டே வந்தான்.

அவன் போட்டு வந்த அடைகளை குருவிகளும் எறும்புகளும் சாப்பிட்டு விட்டன. விறகுவெட்டி அவர்களை வழக்கம் போல விளையாடச் சொன்னான். கட்டையைத் தொங்க விட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தான். இருட்டத் தொடங்கியது. எல்லோரும் தந்தையைக் காணாது திகைத்தனர்.

"நான் வழி காட்டுகிறேன். கவலைப்படாதீர்கள்" என்றான் குள்ளன். வழி தெரியாமல் அவன் அங்கும் இங்கும் அலைந்தான்.



பக்கத்தில் இருந்த பெரிய மரத்தின் மேல் ஏறினான். தொலைவில் விளக்கு வெளிச்சம் தெரிவதைப் பார்த்தான்.

கீழே இறங்கிய அவன் "அண்ணன்களே! சிறிது தொலைவில் வெளிச்சம் தெரிகிறது. கண்டிப்பாக அங்கே வீடு இருக்க வேண்டும். நாம் அங்கே சென்று இன்றிரவு தங்குவோம்" என்றான்.

எல்லோரும் வெளிச்சம் வந்த இடத்தை நோக்கி நடந்தார்கள். அவர்கள் கண்களுக்குப் பெரிய வீடு தெரிந்தது. அது ஒரு அரக்கனின் வீடு. அரக்கனும் அவனுடைய ஏழு மகன்களும் வெளியே சென்றிருந்தார்கள். அரக்கனின் தாய் மட்டும் அப்பொழுது வீட்டில் இருந்தாள்.

குள்ளன் கதவைத் தட்டினான். அரக்கி கதவைத் திறந்தாள். ஏழு சிறுவர்களைப் பார்த்ததும் அவள் நாக்கில் எச்சில் ஊறியது. "பாட்டி! இந்தக் காட்டில் நாங்கள் வழி தவறி விட்டோம்" இன்றிரவு மட்டும் இங்கே தங்கிச் செல்கிறோம்" என்றான் குள்ளன்.

"இங்கே நீங்கள் மகிழ்ச்சியாகத் தங்கலாம், இன்னும் சிறிது நேரத்தில் என் மகனும் ஏழு பேரனும் வந்து விடுவார்கள். உங்களைப் பார்த்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

நீங்கள் களைப்பாக இருக்கிறீர்கள். அந்த அறை என் பேரன்கள் தூங்கும் அறை. அங்கே சென்று நிம்மதியாகத் தூங்குங்கள்" என்று இனிமையாகப் பேசினாள் கிழவி. அவர்களும் அந்த அறையில் சென்று படுத்தார்கள்.

சிறிது நேரத்தில் அரக்கனும் ஏழு மகன்களும் அங்கே வந்தனர். ஏழு பேரன்களின் தலையிலும் கிரீடத்தை அணிவித்தாள் அவள்.

"நீங்கள் சென்று அவர்கள் பக்கத்தில் படுத்துத் தூங்குங்கள்" என்றாள். அவர்களும் சென்று சிறுவர் பக்கத்தில் படுத்தனர்.

தன் மகனைப் பார்த்துக் கிழவி, "இன்று நமக்கு நல்ல வேட்டை ஏழு சிறுவர்கள் வழி தவறி இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றி நம் பேரன்கள் தங்கும் அறையில் தூங்க வைத்திருக்கிறேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமைதான் துயரத்தின் தாய்.
- இங்கர்சால்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழகத்துச் சகோதரர்களே! சகுனித் திட்டத்தை அறியுங்கள்

எங்கள் வடபகுதிக் கடற்பரப்பில் தமிழகத்து மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவது பற்றி ஆராய்வதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறியதும் தமிழக மீனவர்கள் எங்கள் வடபகுதிக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடத் தலைப்பட்டுள்ளனர்.

ஏலவே தமிழக மீனவர்கள் வடபகுதிக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, தங்கள் கடற்றொழிலுக்கு உலைவைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நம்மவர்கள் முன்வைத்து வருகின்றனர்.

இதற்காக அவர்கள் கவனயீர்ப்புப் போராட்டங்களைப் பல தடவைகள் நடத்தியும் உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது தமிழகத்து மீனவர்கள் வாரத்தில் சில நாட்கள் வடபகுதிக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது பற்றி ஆராய்கின்றோம் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறியதும் தமிழக மீனவர்கள் வடபுலத்துக் கடலில் நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

அதேநேரம் அவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் இலங்கைக் கடற்படை ஈடுபடவில்லை.

இதனால் நம் மீனவர்கள் தொழில் நட்டத்தை அனுபவித்து வருவதுடன் மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர்.

தவிர, தமிழக மீனவர்களின் கடற்றொழில் என்பது கடலில் இருக்கக்கூடிய அத்தனை மீன்வளங்களையும் வாரிச்சுருட்டுவதாக இருப்பதுடன் கடல் வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கும் இனப் பெருக்கம் செய்வதற்குமான கடலியல் சூழலையும் அழிப்பதாக இருக்கின்றது.

இதன் காரணமாக, மீன் வளம் நிறைந்த எங்கள் தாயகக் கடற்பரப்பு தனது வளங்களை இழந்து போகும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளது.

இஃது எதிர்காலத்தில் எங்கள் கடற்றொழிலாளர்களுக்கு தொழில் இழப்பை ஏற்படுத்தி, அவர்களை வறுமைக்கு ஆளாக்கும்.

இவையாவற்றையும் விட, தமிழக மீனவர்களை வடபுலத்துக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பதன் மூலம் எங்களையும் தமிழகத்துச் சகோதரர்களையும் மோதவிட்டு, உறவைச் சீர்குலைத்து, பகையை வளர்ப்பதே இதன் உள்நோக்கமாகும்.

எனவே இந்த நரித் தந்திரத்துக்கு நாம் ஆளாகாமல் இருக்க; தமிழகத்து அரசியல் தலைவர்கள் உதவ வேண்டும்.

ஆம், வடபுலத்துக் கடலில் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பது பற்றி இலங்கை அரசாங்கம் ஆராய வேண்டிய தேவை என்ன?

தமிழகத்து மீனவர்கள் மீது கொண்ட அளவு கடந்த பாசமா என்ன?

எம் தமிழகத்துச் சகோதரர்களே! உங்களையும் எங்களையும் மோதவிட்டு எங்களுக்கும் இந்தியாவுக்குமான உறவை வேரறுத்து தங்கள் திட்டத்தை நிறைவேற்றுவதே இதன் நோக்கமாகும்.

ஆகையால் இது விடயத்தில் நாம் விழிப்பாக இருந்து சகுனித் திட்டத்தை முறியடித்து எங்கள் தமிழ்ச் சகோதர உறவைப் பலப்படுத்துவோம்.

## உழவு இயந்திரத்தினுள் சிக்கி ஒருவர் பலி

திருகோணமலை-தோப்பூரில் உழவு இயந்திரத்தில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த உழவு இயந்திர சாரதியும் உதவியாளராக இருந்த உயிரிழந்த இளைஞனும் வீடொன்றில் வைத்து உழவு இயந்திரத்தை சீர்செய்து கொண்டிருந்த போது உழவு இயந்திரம் இயங்கியதில் பின்னால் இருந்த இளைஞன் கலப்பை எனும் பகுதிக்குள் சிக்குண்டுசம்பவஇடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4,7)

## வாள்வெட்டு குழுவின் உடைகள் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி - கோவிலாக்கண்டி காட்டுப் பகுதியில் இருந்து சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்ட காரிலிருந்து வாள்வெட்டுக் குழுவினர் அணிந்து வந்த உடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நாவற்குழி பகுதியில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கார் ஒன்றிற்கு கியூ.ஆர் குறியீடு இன்றி எரிபொருள் நிரப்ப மறுத்ததன் விளைவாக அன்றிரவே நிலைய ஊழியர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய கார் பூட்டப்பட்ட நிலையில் காட்டுப்பகுதியில் இருந்து மீட்டிருந்தனர்.

இதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவை பெற்று காரை உடைத்து சோதனை செய்த போது வாள்வெட்டுக்குழுவினர் அணிந்து வந்த இரண்டு ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கார் மிகிந்தலை பகுதியைச் சேர்ந்தவருடையது எனத் தெரிய வருகின்றது. (4,7)

## இளம் அரசியல்வாதிகளை உருவாக்கும் காலம் வந்துள்ளது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

நாட்டில் தற்போது வேலைசெய்யக்கூடிய அரசியல்வாதிகள் குறைந்த அளவிலேயே இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஆற்றல் கொண்ட இளம் அரசியல்வாதிகள் உருவாகும் காலம் வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அத்தனகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** ஒமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், நீர்வேலி கரந்தன், போயிட்டி பொக்கணை, ஊரெழு சீனோர்-படகு துறை (காரைநகர்), கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு, தோப்புக்காடு, ஊரி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்**18 ஆவது வி.ஜ.ஆர் இராணுவ முகாம்-தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம் - இரணைப் பாலை, 68 ஆவது பிரிவு -டயனைக் கோபுரம்-இரணைப் பாலை, தேவிபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு

மூதூர் பகுதியில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவரொருவர் காணாமல்போன நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மூதூர் - பஹ்றியா நகரைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை யென தெரியவருகின்றது.

கடந்த 24 ஆம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் வீட்டில் இருந்து மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்று வீடு திரும்பாத நிலையில் கிராம மக்கள் மற்றும் மீனவர்கள் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த நபரின் சடலம் கடலில் மிதந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4,7)

## சந்தேகநபர் தப்பியோட்டம் விமான நிலையத்தில் 4 பொலிஸார் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பி ஓடிய நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய 4 பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சார்ஜன்ட் மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

போலியான பெயரில் டுபாய் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சந்தேகநபர், பொலிஸ் அதிகாரிகளிடம் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த சந்தேகநபர் கொலை உள்ளிட்ட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என தெரியவந்துள்ளதுடன், அவருக்கு எதிராக விமானப் பயணத்தடையும் விதிக்கப்பட்டிருந்தது. (4,7)

## குண்டு வெடிப்பு; இருவர் படுகாயம்

இரத்மலானை கல்தெமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் வயோதிப தம்பதியினர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்கிஸ்ஸை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குண்டு வெடிப்பில் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிசேதமடைந்துள்ளது.

குறித்த வயோதிப தம்பதியினர் வீட்டிற்கு முன்பாக உள்ள காணியை துப்பரவு செய்து தீயிட்டுக் கொண்டிருந்த போதே இந்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குண்டு வெடித்ததில் இருந்து சிதறப்பட்ட சிறிய இரும்புத் துகள்கள் தம்பதியின் கை, கால்களில் ஆழமான காயங்களை ஏற்படுத்தியதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது அப் பகுதி மூடப்பட்டு அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (4,7)

## சிறுத்தைக்குட்டி மீட்பு

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹேரோல் தோட்டத்திலுள்ள தோட்ட குடியிருப்பு ஒன்றின் மலசலகூடத்தில் சிக்கியிருந்த சிறுத்தைக் குட்டியை பிடிக்க நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் நேற்று நடவடிக்கை எடுத்தனர்.

நான்கு மாதங்களேயான குறித்த சிறுத்தை குட்டி மலசலகூடத்தில் சிக்கிய போது தோட்ட தொழிலாளி ஒருவர் சிறுத்தையை பார்த்து விட்டு மலசலகூடத்தின் கதவை மூடிவிட்டு ஹட்டன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

பின்னர், உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார், வனஜீவராசி அதிகாரிகள் குறித்த சிறுத்தையை பாதுகாப்பாக மீட்டு அதன் தாய் வசிக்கும் பகுதியில் விடுவதற்காக எடுத்துச் சென்றுள்ளனர். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய விளைச்சலும் இல்லை நெல்லுக்குரிய விலையும் இல்லை

## மன்னார் விவசாயிகள் ஆதங்கம்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட காலபோக செய்கையின் அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில் ஏக்கருக்கு 30 மூட்டை விளைச்சல் கிடைத்த வயல்களில் இம்முறை 8-15 மூட்டைகளே விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்**



குறிப்பாக மாந்தை மேற்கு பகுதியில் உள்ள இலுப்பை கடவை, விடத்தல் தீவு, ஆட்காட்டி வெளி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குள் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் விளைச்சல் இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை மாந்தை பகுதியைச் சேர்ந்த 3900 விவசாயிகள் 15,213 ஏக்கர் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் மஞ்சள் நோய்த் தாக்கம், போதியளவு நீர் உரிய நேரத்தில் கிடைக்காமை, கிருமி நாசினி, களைநாசினிகளின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால் உரிய விளைச்சல் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏக்கருக்கு ஒன்றரை இலட்சத்துக்கு மேல் செலவு செய்து விவசாயச் செய்கையை மேற்கொண்ட நிலையில் ஏக்கருக்கு 50000 குறைவான தொகையே கிடைத்துள்ளதாகவும் ஏக்கருக்கு ஒரு இலட்சத்துக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக மாந்தைப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் உரப்பிரச்சினையால் ஏற்பட்ட நட்டத்துக்கே அரசாங்கம் உரிய நட்ட ஈடு வழங்காத நிலையில் இம்முறையாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து விவசாயிகளை காப்பாற்ற முன்வர வேண்டும் என மன்னார் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரில் உள்ள பிரதேச செயலகங்களால் நெல் கொள்வனவு இடம்பெற்றாலும் கடுமையான நிந்தனைகளின் அடிப்படையிலேயே அவர்கள் நெல்லை கொள்வனவு செய்வதால் விவசாயிகள் தனியார் கொள்வனவாளர்களினால் ஒவ்வொரு நாளும் நிர்ணயிக்கப்படுகின்ற குறைந்த விலைக்கே நெல்லை விற்பனை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (4-285)

# வேரவில் மருத்துவமனைக்கு மருத்துவர் பற்றாக்குறை

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

கிளிநொச்சி வேரவில் பிரதேச மருத்துவமனையில் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருந்து சிகிச்சை பெற வேண்டி உள்ளதாக பொதுமக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று மருத்துவர்கள் பணியாற்ற வேண்டிய மருத்துவமனையில் ஒரு மருத்துவர் மட்டுமே பணியில் இருப்பதன் காரணமாக குறித்த மருத்துவர் தனியாக உள்ளக, வெளியக நோயாளர்களை பார்வையிடுவதன் காரணமாக வெளியக நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வேரவில் பிரதேச மருத்துவமனைக்கு இன்னொரு மருத்துவரையும் நியமிப்பதன் மூலம் நோயாளர்கள் விரைவாக சிகிச்சை பெற முடியும். வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,000 வரையான குடும்பங்கள் இவ் மருத்துவமனையினை நம்பி உள்ள நிலையில் வேரவில் மருத்துவமனைக்கு இன்னொரு மருத்துவரையும் பணிக்கு நியமிப்பதன் மூலம் இப்பிரதேச மக்கள் நன்மையடைவார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மிகவும் பின்தங்கி உள்ள பகுதியில் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் வேரவில் பிரதேச மருத்துவமனையினை நம்பி பல குடும்பங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-350)



கிளிநொச்சியில் இயற்கை விவசாய அறிமுக ஊக்குவிப்பு மற்றும் இலவச பயிற்சியும் நேற்றுக்காலை சோலைவனம் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

(படம்:யதுபாஸ்கரன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 320 | 300 | 350 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 340 | 300 | 400 |
| தக்காளி | .150 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 70 | 80 | 100 |
| கரட் | 120 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 180 | 150 | 200 |
| வாழைக்காய் | 180 | 180 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 130 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 250 | 350 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 320 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 650 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 2000 | 1200 | 1600 |
| போஞ்சி | 260 | 300 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 200 | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 90 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 40 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 100 |

### வறட்சி, வெள்ளம், நோய்த்தாக்கம் காரணமாக

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2725 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2022/2023 இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும் போகச் செய்கையில் வறட்சி, வெள்ளம், நோய் தாக்கம் காரணமாக 2725.74 ஏக்கர் நெற்செய்கை அழிந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ப.தேவரதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும் போக செய்கையில் வெள்ளம், வறட்சி, நோய்த்தாக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் சிறிய நடுத்தர குளங்கள், மானாவாரி செய்கை நிலங்கள் உள்ளடங்கலாக 66,339.13 ஏக்கர் நிலப்பரப்பில் 2022/2023 பெரும் போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவடைந்து வருகின்றன.

மேற்படி செய்கைகளில் வெள்ளம், வறட்சி, நோய் தாக்கம் மற்றும் காட்டு யானை உள்ளிட்ட மிருகங்கள் என்பவற்றால் மேற்படி அழிவுகள் ஏற்பட்டுள்ளதாக மேற்படி திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள உள்ள 10 கம நல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2176.34 ஏக்கர் நெற்செய்கை மாவட்டத்தில் நிலவிய வரட்சி காரணமாக அழிவடைந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக 342.40 ஏக்கர் செய்கைகள் அழிவடைந்துள்ளன.

இதனை விட நோய்த்தாக்கம் காரணமாக பூநகரி பிரதேசத்தில் 141.75 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாகவும் ஏனைய காட்டு யானை மற்றும் விலங்குகளின் தாக்கத்தினால் 65.25 ஏக்கர் செய்கையும் அழிந்துள்ளன.

இவ்வாறு இம்முறை மேற்கொள்ளப்பட்ட 2022/2023 பெரும்போக செய்கையின் போது வறட்சி, வெள்ளம், நோய் தாக்கம் விலங்குகள் என்பவற்றால் சுமார் 2725.74 ஏக்கர் வரையான நெற்செய்கை அழிவடைந்துள்ளதுடன் இதனால் 1106 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி திணைக்களத்தின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## QR முறையை...

அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு தற்போதைக்கு எந்தத் தீர்மானமும் இல்லை. எரிபொருள் விலை அதிகரித்தால் 10 - 15 ரூபாய் வரையில் மாற்றம் ஏற்படலாம்.

ஆனால், உக்ரைன் - ரஷ்யா யுத்தம் போன்ற உலக நிலைமைகளை தன்னால் கட்டுப்படுத்த முடியாது எனவும், இவ்வாறான நிலையில் விலை எவ்வளவு குறையும் எனக் கூறமுடியாது என்றார். (4-7)

## வவுனியாவில்...

யில் குடும்பஸ்தர் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்தபோது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக துவிச்சக்கர வண்டியில் பயணித்த 40 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(4-7)

## பிரதமராக...

ராஜபக்ஷவை நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜய்சுமண நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்த நடவடிக்கைக்கு ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கோரியுள்ளதாகவும் சன்ன ஜயசுமண ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

"பிரதமர் பதவியை மாற்றுவதற்கான நகர்வுகள் இருப்பதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த எங்கள் நண்பர்கள் ஒரு திட்டத்தை முன்வைத்தனர். தினேஸ் குணவர்த்தனவை அப்பதவியில் இருந்து நீக்கி மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க உத்தேசித்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்" என எம்.பி ஜயசுமன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(4-7)

## டிசம்பருக்குள்...

வும் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இக்கட்டான சூழ்நிலையிலும் தனது அரசியலைப் பற்றி சிந்திக்காமல் மக்களைப் பற்றி சிந்தித்து இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஜனாதிபதி முன்வந்தார் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (4-7)

## இலங்கை உள்...

சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தின் இறுதியில் இது தொடர்பான அறிக்கையை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா விடுத்துள்ளார்.

கடன் கட்டமைப்பை வலுப்படுத்தவும், கடனைத் தீர்க்கும் வேகம் மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பல நாடுகளில் தொற்றுநோய்க்கு முன்னரே கடன் பாதிப்புக்கள், உயர்ந்த நிலையில் இருந்தன.

இந்த நிலையில் இறையாண்மைக் கடன் பாதிப்புகள், கொரோனா மற்றும் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரிலிருந்து உருவாகும் அதிர்ச்சிகளால் இந்த நிலைமைகள் மோசமடைந்துள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, உலகளாவிய குடும்பத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களுக்கான தீர்வுகளைக் கண்டறிய சர்வதேச சமூகம் ஒன்றுபட வேண்டிய பொறுப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## பேக்கரி...

பது தொடர்பில் அவதானம் செலுத்த முடியும் என்றும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது சந்தையில் ஒரு கிலோ கிராம் கேக் ஆயிரத்து 200 ரூபா முதல் 1,500 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றை 30 ரூபாயுக்கு தொழில் துறையினருக்கு வழங்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய முன்னதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (4-7)

## கொழும்பில்...

இந்தப் போராட்டத்திற்கு எதிராக கோட்டை பொலிஸாரும் மருதானை பொலிஸாரும் இணைந்து இரண்டு நீதிமன்ற உத்தரவுகளை பெற்றிருந்த நிலையில் நேற்று பிற்பகல் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவிற்கு அருகாமையில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, போராட்டத்தை கைவிடுமாறு முன்வந்த போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் அறிவித்திருந்தனர்.

ஆனால், அவர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டபோது அவர்களை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தினர்.

இதன்போது 30 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு நகரில் பெருமளவு பொலிஸார், இராணுவத்தினர் குவித்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (4-7)

## குருந்...

தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த முல்லைத்தீவு குருந்தூர் மலையில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில், பௌத்த துறவிகள், வெலிஓயா சிங்கள மக்களின் வழிபாட்டுடன் இராணுவத்தினரின் முழுமையான பாதுகாப்புடன் பௌத்த விகாரைக்கான வழிபாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்ச்சையினை ஏற்படுத்திய குருந்தூர் மலையில் இராணுவத்தின் பாதுகாப்புக்கு மத்தியில் விகாரை நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ளதாக கூறப்படும் நிலையில், இவர்கள் திடீர் விஜயம் செய்து களநிலைவரங்களை ஆராய்ந்துள்ளனர். (4-7)

## தேர்...

ளுக்கு சரியான திட்டத்தை வழங்குமாறு நிதியமைச்சிற்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறோம், மேலும் எங்கள் செலவினங்களை கவனமாக திட்டமிட வேண்டும். ஆண்டு முழுவதும் பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது.

எனவே தற்காலிக அடிப்படையில் நிதியை விடுவிக்க முடியாது. எதிர்பார்த்தபடி மார்ச் மாதத்தில் IMF நிதி கிடைக்காத பட்சத்தில் நாம் இருப்பு வைத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

# இந்தியாவில் நேற்று மீண்டும் நிலநடுக்கம்

இந்தியாவில் குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நேற்று பிற்பகலில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்தனர்.

கடந்த சில வாரங்களாக உலகம் முழுவதும் ஆங்காங்கே அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டு வருவது உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஜப்பான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தோனேசியா, நியூ பிரிட்டன், பப்புவா நியூகினியா ஆகிய பகுதிகளில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதேபோல் இந்தியாவிலும் ஆங்காங்கே நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில் மேகாலயாவில் நேற்று காலை 9.49 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1498
ரிஷபம் 0 6 1 4 3 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1073
S 19 24 38 61

கொவிசெத
திகதி 2023.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 3285
D 02 26 32 47
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1391
D 04 08 19 39 54

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 352
துலாம் 32 35 52 55 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/26
சீட்டிழுப்பு இலக்கம் 5043
T 5 0 9 8 0 5
தேசிய லொத்தர் சபை

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1844
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,836,120/-
28 54 60 61 N
DLB

ஜயோதா
B 34 23 34 41 76
சீட்டிழுப்பு இலக்கம் 1194
வர்ணம் மஞ்சள்
2023.02.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 309,095,380.20
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,426,928/-
திகதி 2023-02-26
வெற்றி வாரம் 3730
வர்ணம் ஊதா
11 29 33 48
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,045,960/-
DLB

சசிரி
சீட்டிழுப்பு இல 293
சீட்டிழுப்பு திகதி 2023.02.26
ஞாயிற்றுக்கிழமை
09 38 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,579,340/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.26
சீட்டிழுப்பு இல : 4179
வர்ணம் : இளஞ்சிவப்பு
ரூ. 3,349,420/-
03 59 66 68 Y
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2018
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.26
தினம் ஞாயிற்றுக்கிழமை
D 05 21 30 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,874,760/-
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தோற்றத்தை வெளிக்காட்டி மக்கள் உரிமைகளை நசுக்கும் ரணில்

## சிறீதரன் எம்.பி சீற்றம்



(கிளிநொச்சி)

ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய அடி மனதில் இருக்கின்ற அந்த பயங்கரவாத தோற்றத்தை வெளிக்காட்டி மக்களின் உரிமைகளை தடுத்து வருவது மிக மோசமானது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இன்று இடம்பெறுகின்ற நிழ்வுகளிற்கு இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் முதன்மை காரணராக இருக்கின்றார். குறிப்பாக 94 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலை யாழ்.மாவட்டத்திற்கானதை தீவகத்திற்குள் முடக்கி, அத்தேர்தலில் மற்றவர்களை வாக்களிக்க விடாத பங்கும் அவை சார்ந்தது.

அதற்கு பிற்பாடு வந்த சந்திரிகா வவுனியாவில் கொத்தனி வாக்குகள் மூலம் அத்தேர்தலை நடத்தியிருந்தார். ஆனால், தன்னை ஒரு ஜனநாயகவாதியாக இந்த உலகம் முழுவதும் காட்டிக்கொண்டிருக்கின்ற இன்றைய நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகாரியாக செயற்படுவதை நாங்கள் இன்று அவதானிக்கின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணியினால் முன்னெடுக் கப்படுகின்ற மக்கள் போராட்டங்களையும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களையும் நசுக்குவதற்காக இடைக்கால தடை உத்தரவுகளை பிறப்பிப்பதன் மூலமும், நீதிமன்ற தடை உத்தரவுகளை பிறப்பிப்பதன் மூலமும் நாட்டிலே பேசுகின்ற உரிமையையும், நாட்டிலே போராடுகின்ற உரிமையையும், ஒன்றுகூடுகின்ற உரிமையையும் இந்த நாட்டின் ஜனா திபதி லிபரல் வாதியென்றெல்லாம் பேரெடுத்த அவர் தன்னுடைய அடி மனதில் இருக்கின்ற அந்த பயங்கரவாத தோற்றத்தை வெளிக் காட்டி அவற்றை தடுத்து வருவது மிக மோசமானது.

தனது வழமையான ஐம்பது வருட அரசியலில் எவ்வாறு கடைப்பிடித்தாரோ, தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்க அந்த யுக்தியையும், தந்திரத்தையும் கையாண்டு இந்த நாட்டை மேலும் மேலும் கீழ் நிலைக்கு கொண்டு செல்கின்ற கைங்கரியத்தையே ஆற்றி வருகின்றார் என மேலும் தெரிவித்தார். (4-7)


## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 076 436 5814
076 485 4390 (14742)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 80 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14740)

**076 465 0171, 076 911 9371**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 44 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14740)

**076 435 0614, 077 638 5683**


## பிள்ளைகளின் முன்பே விபரீத முடிவெடுத்த தாய்

கணவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து. இரு பிள்ளைகளையும் பாலத்தில் விட்டுவிட்டு பெண் ஒருவர் ஆற்றில் குதித்ததாக அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். பலாங்கொடை பிரதேசத்தில் வசிக்கும் பெண் எல்பிட்டிய ஊரகஸ்மன்ஹந்தி பிரதேசத்தை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்துள்ள நிலையில் இருவருக்கும் இடையில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இதனால் 9 வயது மகன் மற்றும் ஒரு வயதும் 6 மாதமும் உடைய மகள் ஆகியோரை பெந்தர பாலத்தில் விட்டுவிட்டு. சுமார் 40 அடி உயரத்தில் இருந்து தாயார் ஆற்றில் குதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். நீர்த்தேக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த பெண்ணை அருகில் நின்ற இளைஞர் ஒருவர் காப்பாற்றியதாக கூறப்படுகிறது. (4-7)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள Bag தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண்கள் வேலைக்கு தேவை.

தொடர்பு :- 076 329 0663 (14735)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14716)

076 825 7716 (ஆகாஸ்)

## குத்தகைக்கு தேவை

வான்கள் / கார்கள் குத்தகைக்கு தேவை.

தொடர்பு :- 077 489 1279 (14734)

**நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

**இன்றே பாவியுங்கள்.**

**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

**யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(C-6067)

## காணி தேவை

நல்லூர், கச்சேரி நல்லூர் வீதி, கல்வியங்காடு, திருநெல்வேலி மற்றும் இராச பாதை வீதி ஆகிய இடங்களில் 4 பரப்பு காணி உடனடியாக தேவை. உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(14741)

தொடர்பு :- 076 801 5646

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6069)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6069)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

Pearl Island Inn
Hotel & Restaurant

உயர்தரம் வாய்ந்த தங்ககங்கள் (Rooms) வசதிகளுடன் யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் பாரம்பரிய உணவுகள் மற்றும் குளிர்பானங்களை சுவைத்திட எம்மோடு இணைந்திடுவீர்.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678
www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

உங்கள்
S.Ubesegaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn குழுமம்




(C-6066)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.